தின மலர்
நாள் 23 FEB 2025

# கருத்து கேட்பு கூட்டம் திடீர் ஒத்திவைப்பு

**காஞ்சிபுரம், பிப். 23–**

காஞ்சிபுரம் மாவட்டத்திற்குட்பட்ட வாலாஜாபாத் தாலுகாவில் உள்ள மாகரல் கிராமத்தில், கல்குவாரி மற்றும் கிராவல் குவாரி அமைக்கப்பட உள்ளன.

இதற்கான சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்களிடம் கருத்து கேட்பு கூட்டம், ஆற்பாக்கம் கிராமத்தில், நாளை மறுநாள் நடத்த திட்டமிடப்பட்டு இருந்தது.

ஆனால், தவிர்க்க முடியாத காரணங்களால், இந்த கருத்து கேட்பு கூட்டம் ஒத்திவைக்கப்படுவதாக, கலெக்டர் கலைச்செல்வி தெரிவித்துள்ளார்.

மாலை மலர்

நாள் 23 FEB 2025

காஞ்சீபுரம் அருகே

# கல்குவாரி திட்ட பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் ஒத்திவைப்பு; கலெக்டர் அறிவிப்பு

காஞ்சீபுரம்,பிப்.23-

காஞ்சீபுரம் மாவட்ட கலெக்டர் கலைச்செல்வி மோகன் வெளியிட்டு உள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:-

வாலாஜாபாத் வட்டம், மாகரல் கிராமத்தில்234.50 ஹெக்டர் பரப்பளவில் அமையஉத்தேசிக்கப்பட்ட சாதாரண கல் மற்றும்கிராவல் குவாரி திட்டத்திற்கான சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்களின் கருத்தினை கேட்டறிய வருகிற 25.2.2025 அன்று காலை 10.30 மணியளவில் வாலாஜாபாத் வட்டம், ஆர்ப்பாக்கம், காஞ்சிபுரம் - உத்திரமேரூர் சாலையில் உள்ள அழகன் மஹாலில் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெற இருந்தது. இந்த பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டம்த விர்க்கமுடியாத காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.



மாலை மலர்

நாள் 23 FEB 2025

காஞ்சீபுரம் மாவட்டத்தில்

# குவாரியில் கனிம வளங்களை ஏற்றி செல்லும் லாரிகளுக்கு இணையதளம் மூலம் அனுமதி

## 25-ந் தேதி முதல் நடைமுறைக்கு வருகிறது

காஞ்சீபுரம்,பிப்.23-

காஞ்சீபுரம் மாவட்ட கலெக்டர் கலைச்செல்வி மோகன் வெளியிட்டு உள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:-

காஞ்சிபுரம் மாவட்டத்தில் குவாரி குத்தகைதாரர்களுக்கு இணையதளம் வாயிலாக இ-அனுமதி வழங்கும் நடைமுறை 25.2.2025 முதல் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. மேலும் குவாரி குத்தகை உரிமம் கோரும் விண்ணப்பங்களை 25.2.2025 முதல் mimas.tngov.in என்ற இணையதளம் வாயிலாக மட்டுமே சமர்ப்பிக்கு மாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

எனவே குத்தகைதாரர்கள் 25.2.2025 முதல் இணைய தளத்தில் விண்ணப்பம் செய்து எளிதாகவும், விரைவாகவும் நடைச்சீட்டு பெற்றுக் கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.மேலும் குத்தகைதாரர்கள் குத்தகை உரிமம் வழங்கப்பட்ட பகுதியில் விதிகளுக்குட்பட்டு குவாரிப்பணி மேற்கொள்ளவும், வாகன ஓட்டுநர்கள் குவாரியில் இருந்து கனிமங்கள் ஏற்றிச்செல்லும் போது உரிய அனுமதி சீட்டும்.

கிரஷரிலிருந்து எம்.சாண்ட் ஜல்லி, சிப்ஸ் போன்ற கனிமங்கள் ஏற்றிச்செல்லும் போது உரிய போக்குவரத்து நடைசீட்டும் பெற்று கனிமம் கொண்டு செல்லவேண்டும், அவற்றினை வாகன தணிக்கையின் போது வைத்திருக்க வேண்டும். உரிய அனுமதியில்லாமல் குவாரிப்பணி மேற்கொள்வது. கனிமங்கள் எடுத்துச் செல்வது கண்டறியப்பட்டால் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.